DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 172/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் (P.w.11) |
| Father/Husband Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of November 2025

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது பச்சேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கம்பி கட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

குமார் தன் குடும்பத்துடன் திருச்சுழியில் குடியிருந்து வருவதாகவும் அருப்புக்கோட்டை மதுரைரோடு சண்முகவேல் நகரில் குடியிருந்து வரும் சாலமன் மகன் தங்கதுரை என்பவர் எங்கள் ஊருக்கு கிழக்கே குண்டாற்றுக்கு

கிழக்கே சொந்தமாக இடம் வாங்கி அதில் விவசாயம் செய்து வந்ததாகவும், அதன்பின்னர் தரிசாக போட்டிருந்தார் என்றும் கடந்த 2015ம் வருடம் குமாருக்கு கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்பந்தம் போட்டதாகவும் அதன்பின்னர் குமார் பெருவாரியான இடங்களில் மணலை திருட்டு தனமாக அள்ளிவிட்டார் என்றும் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த பலருமம் குமார் அந்த இடத்தில் மணல் அள்ளுவதை நாங்கள் நேரடியாக பார்த்திருக்கிறோம் என்றும் தங்கதுரை கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்பந்தம் போட்ட இடத்தில் வில்லங்கம் இருப்பதாகவும் ஒப்பந்தம் செய்துள்ள இடம் திருச்சுழியை சேர்ந்த நாகலிங்கம் பிள்ளை என்பவருக்கு சொந்தமான இடம் என்றும் நாகலிங்கம் பிள்ளை அருப்புக்கோட்டை உரிமையியல்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும் நாகலிங்கம் பிள்ளை என்பவருக்கு சொந்தமானது என்று தீர்ப்பு ஏற்பட்டதாகவும் பின்னர் குமார் தங்கதுரையிடம் ஏற்கனவே போட்ட ஒப்பந்தப்படி அந்த இடங்களை கிரையம் செய்யவில்லை என்றும் இதனால் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.